# இயல் 7.8 - புள்ளியியல்

பயிற்சி எண் :: 7.8.1.1.E

புள்ளியியல் - முகடு - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

Statistics - Mode - Day to day life problems - Exercise

## புள்ளியியல் - முகடு - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி




1) அருளமுதனின் ஆசிரியர் அவனிடம் 1 க்கும் 20 க்கும் இடையேயுள்ள இரட்டைப்படை எண்களின் முகடுகளை கண்டுபிடிக்குமாறு கூறினார். அவன் 4 என விடையளித்தான். இது சரியா?

1 க்கும் 20 க்கும் இடையேயுள்ள இரட்டைப்படை எண்கள் : 2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20

இங்கு எந்தவொரு தரவும் ஒரு முறைக்கு மேல் வரவில்லை.
எனவே, இதற்கு **முகடு இல்லை**.

∴ அருளமுதனின் விடை **தவறானது.**

2) பொம்மைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையின் நிறுவனர் ஒருவர், ஒரு பள்ளியில் இருந்து வந்திருந்த 15 குழந்தைகளிடம் அவர்கள் விரும்பும் விலங்கு பொம்மைகளை தேர்ந்தெடுக்குமாறு கூறினார். அவர்கள் தேர்ந்தெடுத்த பொம்மைகளின் விவரங்கள் பின்வருமாறு, யானை, புலி, மான், சிறுத்தை, யானை, கரடி, புலி, சிறுத்தை, யானை, சிறுத்தை, மான், புலி, சிறுத்தை, யானை, யானை. எந்த விலங்கு பொம்மையை அதிக குழந்தைகள் விரும்புகின்றனர்?

| விலங்கு பொம்மைகள் | | நேர்க்கோட்டுக் குறிகள் | நிகழ்வெண் |
|---|---|---|---|
| யானை |  | 卌 | 5 |
| புலி |  | \|\|\| | 3 |
| மான் |  | \|\| | 2 |
| சிறுத்தை |  | \|\|\|\| | 4 |
| கரடி |  | \| | 1 |

∴ **யானை** பொம்மையை அதிக குழந்தைகள் விரும்புகின்றனர்.

3) மாறன் ஒரு ஈட்டி எறிதல் விளையாட்டு வீரர். அவர் பயிற்சி அமர்வின் போது 15 முறை ஈட்டி எறிந்த தூரங்களின் விவரங்கள் (மீட்டரில்) பின்வருமாறு, 85.6, 83.8, 85.6, 82.4, 83.8, 81.5, 83.8, 81.5, 84.8, 82.4, 83.8, 81.5, 85.6, 84.8, 85.6. எனில், அவர் அதிக முறை எறிந்த தூரம் அதாவது முகடு என்ன?

| ஈட்டி எறிந்த தூரம் | நேர்க்கோட்டுக் குறிகள் | நிகழ்வெண் |
|---|---|---|
| 81.5 | \|\|\| | 3 |
| 82.4 | \|\| | 2 |
| 83.8 | \|\|\|\| | 4 |
| 84.8 | \|\| | 2 |
| 85.6 | \|\|\|\| | 4 |

இங்கு, 83.8 மீ மற்றும் 85.6 மீ ஆகியவை தலா நான்கு முறைகள் வந்துள்ளன. எனவே, இத்தரவிற்கு இரு முகடுகள் உள்ளன.

∴ மாறன் அதிக முறை ஈட்டி எறிந்த தூரங்கள் அதாவது முகடுகள் **83.8 மீ** மற்றும் **85.6 மீ** ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/3XyyIT7eFZs


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 17th January, 2023 :: 18:43 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**